1984 பிப்ரவரி 23]

தணிக்கை முறைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அதற்காக கூடுதலாக காவல்துறை அதிகாரிகள் தேவைப்படுமானால் காவல் துறைக்கு அதை ஒதுக்கீடு செய்வதற்கு ஆயத்தமாகயிருக்கிறேன் என்று சொல்லி சிலயிடங்களில் கொஞ்சம் வலுப்படுத்தி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, கேரளாவிற்கு அரிசி கடத்திச் செல்வதைத் தடுப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுத்தாலும் கடத்தல்காரர்கள் செக் போஸ்ட்களை லாரிகளை வைத்து இடித்துத் தகர்த்து அரிசியைக் கடத்திச்செல்கிறார்கள். இப்படி வன்முறையைக் கையாண்டு கடத்தல் செய்யும் கடத்தல்காரர்களை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கே கண்காணிப்பு, தணிக்கைமுறையை எவ்வளவுக்கெவ்வளவு வலுப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு வலுப்படுத்துவதற்கு முயற்சியை ஒரு பக்கம் எடுக்க வேண்டும் என்று இந்தத் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கொண்டுவர இயலுமா என்பதைப் பற்றியும் அதை எந்தளவுக்குக் கொண்டு வர முடியும் என்பதைப் பற்றியும் அந்தத் துறை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள். ஆனால்கட்டாயம் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பார்கள் என்று இப்போது சொல்வதற்கில்லை. நிலைமைகளை ஆராய்ந்து, யார் யார் என்று ஆராய்ந்து செய்ய அதற்கென்று வழிமுறைகள் இருக்கின்றன. அதைப் பின்பற்றி அவர்கள் தொடர்ந்து குற்றம் செய்கிற அளவிற்கு அரசாங்கத்திற்குப் படுமானால் தடுப்புக் காவல் சட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கலாம். அதையும் அரசாங்கம் ஆராயும்.

திங்களூர் கிராம பள்ளவாரி ரெவின்யூ புறம்போக்கில் அனுமதி இல்லாமல் வெட்டப்பட்ட மரங்கள்.

138 —(*வினா எண். 17550)— திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், திங்களூர் கிராமத்தில் பள்ளவாரி, ரெவின்யூ புறம்போக்கில் அனுமதி இல்லாமல் அரசுக்குச் சொந்தமான மரங்களை வெட்டியதாகப் புகார் மனு அரசிற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) புகார் மனுவின்படி சம்பந்தப்பட்ட இடங்களை வருவாய்த்துறை மற்றும் வன அலுவலர்களால் பார்வையிட்டதில் ரூ. 60,499 மதிப்புள்ள மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. மேற்படி மரங்களை வெட்டிய நபர் மீது இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) 447, 427, 420 மற்றும் 379 பிரிவின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, மரங்களை வெட்டியவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் இந்த மரங்களை ஏலத்தில் விடுகிறபோது ஏலத்தில் எடுத்தவர்கள் புறம்போக்கில் இருக்கக்கூடிய மரங்களையும் சேர்த்து வெட்டிவிடுகிறார்கள். அப்படி வெட்டுகிறபோது ஆரம்பத்திலேயே அதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அப்படி வெட்டுபவர்கள்மீது, வெட்டுவதை சரியாகக் கண்காணித்து தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு, இதை உடனடியாக விசாரித்து எப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது, எப்படி முறைப்படுத்துவது என்பது பற்றி ஆராய்ந்து அரசுக்கு சிபாரிசு செய்வதற்காக அரசாங்கத்தின் இரண்டாவது செயலாளராக இருக்கும் திரு. டி. வி. அந்தோணி அவர்களையும் திரு. வில்சன், கூடுதல் தலைமை வனப் பாதுகாவலர் அவர்களையும் கொண்ட ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அவர்கள் விரைவில் ஆராய்ந்து முடிவை அறிவிப்பார்கள்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு வந்திருக்கக்கூடிய அந்தத் தகவல் அதிகாரிகளிடத்திலிருந்து வந்திருக்கிறதா அல்லது பொது மக்களிடமிருந்து வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, முதலில் பொது மக்கள்தான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் வட்டத்தில் குறிப்பாக திங்களூர் மலை வட்டாரத்தில் ரெவின்யூ புறம்போக்கு நிலமும் காட்டு இலாகாவினுடைய நிலமும் அருகாமையில் உள்ளதால் காட்டு இலாகாவிற்குச் சொந்தமான மரங்

1984 பிப்ரவரி 23]

களை திருடிக்கொண்டு போவதும் அதன் பேரில் இதே மன்றத்தில் கேள்வி கிளப்புவதும் வழக்கமாக இருக்கிறது. அதேயிடத்தில் அந்த மரங்களை வெட்டுபவர்கள் ரெவின்யூ புறம்போக்கு மரங்களையும் வெட்டிவிடுகிறார்கள் காட்டு இலாகா இடம் என்று. ஆகவே, இந்த இடங்களை வரையறுத்து, ரெவின்யூ புறம்போக்கு எந்தெந்த இடங்கள் என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து அதற்கு தகுந்த பாதுகாப்பு போட்டு அந்த மரங்களை கான்ட்ராக்டர்கள் அல்லது யாரும் வெட்டமுடியாத அளவிற்கு திருடர்களைப் பிடிப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் என்ன செய்யப்பட்டிருக்கின்றன என அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது காட்டிலாகா மரமானாலும் சரி, ரெவின்யூ இலாகா புறம்போக்கு நிலத்திலுள்ள மரமானாலும் சரி, இரண்டுமே அரசுக்குச் சொந்தமான மரங்கள்தான். ஆகவே காட்டிலாகா மரத்தை வெட்ட வேண்டுமென்றோ அல்லது ரெவின்யூ புறம்போக்கு மரத்தை வெட்ட வேண்டுமென்றோ, அரசுக்கு அந்த எண்ணம் இல்லை. இரண்டையுமே பாதுகாக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அப்படி தவறு நடந்திருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் தவற்றைச் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. இனிமேல் இம்மாதிரியான தவறு நடக்கக்கூடாது என்பதற்காகத்தான், அரசின் இரண்டாவது செயலாளர் திரு. டி. வி. அந்தோணி அவர்களையும், கூடுதல் தலைமை வனப் பாதுகாவலர் அவர்களையும் கொண்ட ஒரு குழுவைப் போட்டு, ஆராய்ந்து வருகிறோம். விரைவில் நடவடிக்கை எடுப்போம்.

தென் ஆலப்பாக்கம் கிராமப் புறம்போக்கு நிலத்தின் மனைப் பட்டா கோரி மனு செய்துள்ள ஏழை மக்கள்.

139—(*வினா எண். 18805)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் தொகுதி மயிலம் ஒன்றியம் தென் ஆலப்பாக்கம் கிராமத்தில் புறம்போக்கு இடங்களில் வீடு கட்டி வசித்து வரும் ஏழை மக்கள் மனைப்பட்டா கோரி அரசுக்கு மனு செய்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.